# மெட்ரோ ரயில் நிறுவனத்துக்கு 'ஃபிஸ்ட்' விருது

சென்னை, மார்ச் 1: இந்திய தீயணைப்பு மற்றும் பாதுகாப்பு சங்கத்தின் சார்பில், சென்னை மெட்ரோ ரயில் நிறுவனத்தின் திட்டப் பணிகளைப் பாராட்டி 'ஃபிஸ்ட்' விருது வழங்கப்பட்டுள்ளது.

இந்திய தீயணைப்பு மற்றும் பாதுகாப்பு சங்கம் சார்பில், பாதுகாப்பு, தீயணைப்பு மற்றும் அவசரகால உதவித் துறையில் அமைப்பு மற்றும் தனிநபர்களின் பங்களிப்பை அங்கீகரிக்கும் வகையில், 'ஃபிஸ்ட்' விருது வழங்கப்படுகிறது.

அந்த வகையில், சென்னை மெட்ரோ ரயில் நிறுவனத்தின் திட்டப் பணிகளைப் பாராட்டி அந்தச் சங்கம் சார்பில் 'ஃபிஸ்ட்' விருது தில்லியில் நடைபெற்ற விழாவில் வழங்கப்பட்டுள்ளது.

இந்த விருதை சென்னை மெட்ரோ ரயில் நிறுவனத்தின் இயக்குநர்(திட்டங்கள்) ராஜீவ் நாராயண் திவேதியிடம் இந்திய தீயணைப்பு மற்றும் பாதுகாப்புச் சங்கத்தின் சர்வதேச தலைவர் பங்கஜ் தர்கர் வழங்கினார்.

இந்தத் தகவல் சென்னை மெட்ரோ ரயில் நிறுவன செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.